<u>இலங்கைத் துறைமுக அதிகாரசபை</u>

எனது இல: எச்ஆர்டி/என்ஈஎக்ஸ்/ 04/ பொது/ எஸ்.கே.

<u>அறிவித்தல்</u>

கொழும்பு துறைமுகத்தில் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவியின் வெற்றிடங்களிற்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய இந்த அதிகாரசபையின் நிரந்தரம் செய்யப்பட்ட ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

பதவி :- களஞ்சியப் பொறுப்பாளர் (வெற்றிட எண்ணிக்கை – கொழும்பு 03) – (Store keeper)

சம்பள வகையீடு :- 9:3 (SNT3)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 40,240/=
வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூ. 575/=

ஏற்கனவே உயர் சம்பள வகையீடுகளில் இருக்கும் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படின் தற்போது இருக்கும் சம்பள வகையீடு கவனத்தில் கொள்ளப்பட்டு 9:2(SNT2) அல்லது 9:1 (SNT1) வகையீடுகளில் அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>தகுதித்திறன்:</u>

(அ) 1. க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று(03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

11. உரிய துறை தொடர்பாக மூன்றாம் (03) மட்டத்தின் தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (NVQ3) / மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட உரிய துறையின் அதற்கு சமனான சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

111. SS சம்பள வகையீட்டில் மூன்று(03) வருட கால சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) 1. க.பொ.த. (சா/தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் / மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் நடாத்தப்பட்ட துறைமுக நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிப் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

11. உரிய துறை தொடர்பாக மூன்றாம் (03) மட்டத்தின் தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (NVQ3) / மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட உரிய துறையின் அதற்கு சமனான சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

111. SS சம்பள வகையீட்டில் ஐந்து(05) வருட கால சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

<u>பிணை வைத்தல்</u>

நியமனம் பெற்றுக் கொள்பவர் ரூ. 5000/= பிணையினை நம்பிக்கை பிணைக் காப்புறுதி மூலம் வைக்க வேண்டியதுடன், பிணை உறுதி தொடர்பாக நியமிக்கப்பட்ட தவணைக் கட்டுப்பணம் நியமனம் பெற்றுக் கொள்பவரினாலேயே செலுத்தப்படல் வேண்டும். இதற்குப் புறம்பாக நியமனம் பெற்றுக் கொள்பவரினால் பணமாக ரூ. 4000/= பிணையொன்று இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் வைப்பிலிடுதல் வேண்டும்.

குறிப்பு

1. செயலாற்றுகை மட்டம் (Perfomance) திருப்திகரமானதாக இருத்தல் வேண்டும்.
11. சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய தொழில் சார் அறிவினை பரீட்சிக்கும் பரீட்சையில் (எழுத்து/ செயன்முறை) சித்தியடைதல் வேண்டும்.
111. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அவசியமாயின் மருத்துவப் பரிசோதனையொன்றிற்கு உட்படுத்தப்படுவர்.

iv. பாதுகாப்புக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள், இப் பதவிக்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவது பாதுகாப்பு சேவையில் / தீயணைப்புப்படை சேவையில் ஐந்து (05) வருடத்தை விடக் கூடிய சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமே.

v. தனது பதவியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ள, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் பெற்றுக் கொண்ட பட்டதாரிகள் ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் தனது பதவி அல்லது தற்போது இருக்கும் சம்பள வகையீடு கவனத்திற் கொள்ளாது இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

இவ்வறிவித்தலிற்கேற்ப தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை மாதிரிப் படிவத்திற்கமைய ஒழுங்கு செய்து சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் ஊடாக 2025.06.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட கல்வி மற்றும் தொழில் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும். அவ்வாறு பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிக்கப்பட்டுள்ள திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் அவை தாமதமானதற்கான காரணங்கள் சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் அல்லது வதிவிட முகாமையாளர்களினால் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு காரணங்கள் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு சகல வகையிலும் இணங்கப் பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பமிட்டது / யூ.எல்.டீ.சீ. சில்வா
பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்)
2025.05.23 ஆந் திகதி
மனிதவளப் பகுதி.